| | | |
|---|---|---|
| சாட்சி : PW 2<br>பழனியாண்டி | அ.வ.எண். 72/2018 | 20.09.2024 |

குறுக்கு விசாரணை

1) பனையடியான் மனைவி அங்கம்மாள் மற்றும் அவரது மகன் வீரமலையும் எந்த சொத்தை பொறுத்து வெங்கடேஸ்க்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்துள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் கையொப்பம் செய்யும் போது மேற்படி ஆவணத்தில் உள்ளவிபரங்களை நான் படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான். அங்கம்மாள் மற்றும் வீரமலை எழுதிக்கொடுத்த சொத்து அவர்களுக்கு தான் பாத்தியப்பட்டது என்பதை பொறுத்து நான் எந்த ஆவணமும் பார்க்கவில்லை என்றால் சரிதான். பனையாடியான் ஏற்கனவே விற்பனை செய்த சொத்தை பொறுத்து அங்கம்மாள் மற்றும் வீரமலை செட்டில்மெண்ட் ஆவணம் மோசடியாக எழுதி வைத்துள்ளார்கள் என்றாலும் அதற்கு நான் உடந்தையாக இருந்துள்ளேன் என்றால் சரியல்ல.